பக்கங்கள்: எட்டு

பொது நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேசசபை

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஐப்பசி 24 திங்கட்கிழமை (10-11-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 325

# தீர்வு யோசனைகளுக்கு எதிராக சிறிமானி தலைமையில் இயக்கம்!

## கையெழுத்து வேட்டை ஆரம்பம்

கொழும்பு, நவம்பர் 10

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு முன்வைத்துள்ள அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகளுக்கு எதிராக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) நேற்று எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

சிறிமானி அத்துலத்முதலி தலைமையில் இரத்மலானை, தெகிவளை பிரதேசங்களில் கையெழுத்து திரட்டும் நடவடிக்கைகளில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் நேற்று ஈடுபட்டனர்.

சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக 40 இலட்சம் கையொப்பங்கள் பெறப்படும் என்றும் —

மார்ச் மாதத்துக்கு முன்பு நாடெங்கும் கையெழுத்துக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா, பறயனாலங்குளத்தில

## 10-க்கும் மேற்பட்ட காவலரண்கள் அழிக்கப்பட்டதாக புலிகள் தெரிவிப்பு

வவுனியா, நவ 10

வவுனியா, பறயனாலங்குளம் வீதியில் உள்ள காவலரண்கள் மீது கடந்த சனிக்கிழமை அதிகாலை நடத்திய தாக்குதலில் படையினரின் 10-க்கும் மேற்பட்ட காவலரண்கள் அழிக்கப்பட்டதாகவும் 10-க்கும் மேற்பட்ட பொலீஸார் கொல்லப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

தமது போராளிகளான லெப். கேணல் சுகந்தன் மற்றும் அசோக் ஆகியோரின் 6ஆம் மாத நினைவாகவே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்—

தமது தரப்பில் இழப்பு எதுவும் இல்லை என்றும் — புலிகள் அறிவித்துள்ளனர்.

★ ஏ. கே. எல். எம். ஜி - 1
★ ஏ. கே. ரவைக் கூடுகள் - 69
★ நடுத்தர ரவைகள் - 6080
★ நேட்டோ ரவைகள் - 20
★ கே. எல். எம். ஜி ரவைகள் -
★ ஏ. கே. எல். எம் ஜி ரம் ரவைக் கூடுகள் - 4
★ 40 எம். எம். எறிகணைகள்
★ 5 56 ரவைகள் - 31
★ ஏ கே. ரவைகள் மற்றும் தலைக் கவசங்கள், மிதிவெடிகள் என்பனவற்றையும் தாம் கைப்பற்றியதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(இ-21)

## புலிகளுடன் கருணாநிதிக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது

### ஜெயின் கமிஷன் அறிக்கையில் தெரிவிப்பு

புதுடில்லி, நவ. 10

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் தி. மு. க. தலைவர் கருணாநிதிக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்ததாக ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக 'இந்தியா ருடே' சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலையின் பின்னணி குறித்து விசாரணை மேற்கொண்டு வந்த ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட முன்னர் 'இந்தியா ருடே'யும் மற்றும் நாளிதழ்களும் வெளியிட்ட தகவல்கள் மேலும் வருமாறு:-

இலங்கையில் இந்திய அமைதிப்படையுடன் விடுதலைப் புலிகள் போராடிக் கொண்டிருந்த போதும் தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தொடர்ந்தது.

1990 ஆம் ஆண்டு ஈ. பி.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## எல்லாக் கட்சிகளுமே புலிகளை ஆதரித்தன

### கருணாநிதி தெரிவிப்பு

புதுடில்லி, நவ. 10

இந்திரா காந்தி காலத்திலேயே விடுதலைப் புலிகளுக்கு இந்திய மண்ணில் பயிற்சி முகாம்கள் இருந்தன. தமிழ் நாட்டில் எல்லாக் கட்சிகளும், பத்திரிகைகளும் ஒரு காலகட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளித்து வந்துள்ளன.

தமிழக முதல்வர் மு. கருணாநிதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலையின் பின்னணி குறித்து விசாரணை மேற்கொண்டு வரும் ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கை என 'இந்தியா ருடே' இதழும் பிற நாளிதழ்களும் வெளியிட்ட செய்தியில் தி. மு. கவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்ததற்கு பதிலளிக்கும் வகையிலேயே கருணாநிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பத்மநாபா கொலைக்குப் பின்னரும் கூட விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியுள்ளார் என்றும் கருணாநிதி கூறினார்.

(இ-5)

## வவுனியா சுற்றிவளைப்பு

வவுனியா, நவ. 10

வவுனியாவின் பல பகுதிகள் நேற்று சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் நடத்தப்பட்டன.

தோணிக்கல் உள்ளிட்ட பலபகுதிகளிலும் மக்கள் தடுக்கப்பட்டு தீவிர விசாரணைக்குள்ளாக்கப்பட்டனர்.

(இ-21)

## சிவில் தொண்டர் படையை சேர்ந்த பெண் சூட்டுக்கு பலி!

### காரைதீவுப் பகுதியில் சம்பவம்

பொலீஸ் நிலையத்தில் இருந்து வீடு திரும்பிய சிவில் தொண்டர் படையைச் சேர்ந்த எஸ். சிறிகாந்த என்ற பெண் வீட்டு வாசலில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை காரைதீவில் இடம்பெற்றது.

இப்பெண் சம்மாந்துறைப் பொலீஸில் சேவையாற்றிவந்தார்.

(இ-14-21)

## வாகனங்களைச் சோதனையிட பொலீஸாருக்கு நவீன கருவிகள்

மட்டக்களப்பு, நவ. 10

கிழக்கு மாகாணத்திலிருந்து கொழும்பு செல்லும் சகல வாகனங்களையும் சோதனையிடுவதற்கு நவீன ரக சோதனைக் கருவிகள் பொலீஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன.

இத்தகைய சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கெனப் பொலீஸாருக்கு விசேட பயிற்சிகள் அளிக்கப்பட்டு உள்ளன.

சோதனைச் சாவடி ஒவ்வொன்றிலும் 15 பொலீஸாரும், பொருள்களை ஏற்றி இறக்குவதற்காக 30 தொழிலாளர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 3 இடங்களில் இவ்வாறு சோதனையிடப்படும்.

சோதனையிடப்பட்ட பின்னர் இது தொடர்பான விவரங்கள் பொலீஸாரால் பதிவுசெய்து கொள்ளப்படும் எனவும் —

சந்தேகமானவர்களை விசாரணை செய்வதற்காக சிவிலுடையிலுள்ள புலனாய்வுப் பிரிவு, விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர் கடமையில் ஈடுபட்டுள்ளார்கள் எனவும் — தெரிவிக்கப்பட்டது.

(மற்றும் ஒரு செய்தி 3 ஆம் பக்கத்தில்) (இ-5-21)

### அம்பாறை சென்றல் முகாம்

## கோணேஸ்வரி மரணம்: நாளை விசாரணை

மட்டக்களப்பு, நவ. 10

அம்பாறை சென்றல் முகாமைச் சேர்ந்த கோணேஸ்வரி முருகுப்பிள்ளையின் (வயது 32) மரணவிசாரணை நாளை கல்முனை நீதிமன்றத்தில் நடைபெறும்.

பிரஸ்தாப பெண் கடந்த மே மாதம் 17 ஆம் திகதி பொலீஸாரின் பாலியல் வன்முறையின் பின்பு கிரனைட் வீசிக் கொல்லப்பட்டதாகத் தமிழ் அரசியல் கட்சிகள் முறைப்பாடு செய்திருந்தன.

விடுதலைப் புலிகள் - பொலீஸ் மோதலில் அகப்பட்டு இப்பெண் இறந்ததாக பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை நீதிபதி அன்ரன் பாலசிங்கம் முன்னிலையில் நடைபெறும் விசாரணைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சண்டே ரைம்ஸ் உதவி ஆசிரியர் எஸ் எஸ். செல்வநாயகம் ஆகியோர் சாட்சியமளிக்க இருக்கின்றார்கள்.

## இராணுவத்துக்கு மீண்டும் ஆள் திரட்டல்

கொழும்பு, நவ. 10

இலங்கை இராணுவ சேவையில் பழுதுபார்த்தல், படைப்பிரிவுச் சேவைகள் என்பனவற்றுக்கு ஆள்களைத் திரட்டுவதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

பயிலுநர் இராணுவத்தினருக்கான இந்த நேர்முகப் பரீட்சைகள் நாளை காலை 10 மணியிலிருந்து மாலை 6 மணிவரை மகரகம தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5)

## துப்பாக்கிச் சூட்டில் பெண்கள் காயம்

மட்டக்களப்பு, வாழைச்சேனையில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவமொன்றில் 2 பெண்கள் காயமடைந்தனர்.

பொலீஸாராலேயே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது எனவும் தற்செயலாகவே இவர்கள் மீது சூடுபட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பகுதியில் பல குளங்களில் நீர் நிரம்பி வான் பாய்கின்றது

## மூன்று குளங்கள் உடைப்பெடுப்பு

வவுனியா, நவ. 10

கடந்த ஒரு வாரகாலமாக வன்னிப் பகுதியில் பெய்து வரும் மழையினால் பல குளங்களில் நீர் நிரம்பி வான் பாயத் தொடங்கி உள்ளது.

பேராங்கண்டல் குளம் 5 அங்குலமும்—

கோட்டை கட்டிய குளம் 7 அங்குலமும்—

மருதங்குளம் 1 அடியும் வான் பாயத் தொடங்கியுள்ளன.

இதன் காரணமாக புத்துவெட்டுவான் — துணுக்காய் வீதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் உடையார் கட்டுக் குளம் உட்பட 3 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன.

இதனால் பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் 3 இடங்களில் வீதிக்கு மேலாகத் தண்ணீர் பாய்ந்தபடி உள்ளது.

இதனால் ஏற்கனவே இடம்பெயர்ந்து தற்காலிகமாக குடிசைகளை அமைத்து தங்கியிருந்த பல குடும்பங்கள் மீண்டும் இடம்பெயரும் நிலை ஏற்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளன.

நேற்றைய அறிவிப்பின்படி வன்னியில் உள்ள குளங்களின் நீர்மட்டம்வருமாறு:-

- ★ வவுனிக்குளம் — 12 அடி
- ★ முறிகண்டிக்குளம் — 6 அடி 7 அங்குலம்
- ★ சின்ன விளங்குளம் — 8 அடி 9 அங்குலம்
- ★ ஐயங்குளம் — 5 அடி 10 அங்குலம்
- ★ அம்பலப் பெருமாள் — 6 அடி 9 அங்குலம்
- ★ கல்விளான் — 6 அடி 4 அங்குலம்
- ★ மல்லாவிகுளம் — 7 அடி
- ★ பனங்காமம் — 7 அடி
- ★ இரணைமடு — 22 அடி
- ★ அக்கராயன் குளம் — 15 அடி 6 அங்குலம்
- ★ வன்னேரிக்குளம் — 6 அடி 7 அங்குலம்
- ★ புதுமுறிப்பு — 11 அடி 2 அங்குலம்
- ★ பிரமன்தனாறு — 4 அடி 1 அங்குலம்

(இ-164)


**திறப்பு விழா**

**D. சேனாதிராஜா M.H.D.I.**

இன்று (10-11-97) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணி முதல் 12-25 மணி வரையுள்ள சுபவேளையில் மங்களகரமாக ஆரம்பிக்கின்றோம்.

கண் பரிசோதித்துக் கண்ணாடி வழங்குமிடம்,
செயற்கைப் பற்கள் கட்டுமிடம்,
மிதந்த பற்களுக்கு ஒளிப் செய்யுமிடம்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரும் வந்து சிறப்பிக்கவும்.

**D. சேனாதிராஜா M.H.D.I.**
இல. 162, 1ஆம் குறுக்குத்தெரு,
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)
யாழ்ப்பாணம்.

கிளை நிறுவனம்:
கோமஸ் மூக்குக்கண்ணாடி அகம்,
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(51068)



**63 ஆவது பிறந்த தினம்**
(11-10-1997)

பல்கலைக்கழக வரலாற்றில் புகழ்பெற்று நிற்கும்
முன்னாள் துணைவேந்தர்
**பேராசிரியர் அ. துரைராசா**
முன்னாள் பதிவாளர்
**திரு. வே. ந. சிவராசா**

இவர்கள் இருவரும் வடமராட்சி என்னும் பிரதேசத்தில் ஒரே மாதம் ஒரே ஆண்டில் அவதரித்து ஹாட்லிக் கல்லூரியில் ஒருமிக்க படித்த பெருமையும் இவர்களைச் சாரும். இருவரின் நினைவாக பரமேஸ்வரன் ஆலயத்தில் பகல் 11 மணிக்கு விசேட அபிஷேகமும் பூஜையும் இடம்பெறும். பிற்பகல் 4 மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் கிரிக்கெட், உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: யாழ். பல்கலைக்கழகம்
ச. க. தனேந்திரன் [51073]



**வேம்படி மகளிர் கல்லூரி**
**பரிசளிப்பு விழா - 1997**

காலம்:- 11-11-97 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி
இடம்:- கல்லூரி மண்டபம்

பிரதம விருந்தினர்கள்:

**திரு. சு. இரத்தினராசா**
(கல்விப்பணிப்பாளர், யாழ். வலயம் 1)

**திருமதி யோ. இரத்தினராசா**

பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

**அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.**

(சி/2013)



**கண்ணீர் அஞ்சலி**

**சுவாமிநாதன் சண்முகலிங்கம்**
(சிரேஷ்ட உதவித் தபால் அதிபர், சுழிபுரம்)

அன்னாரின் திடீர் மறைவு, எமக்கு மிகவும் மனவேதனையைத் தந்துள்ளது. அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளும் அதே வேளை அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சுழிபுரம் தபால் அதிபர்,**
**உதவித் தபால் அதிபர்,**
**உப தபால் அதிபர்கள்,**
**மற்றும் சக ஊழியர்கள்.**

(51067)


# சர்வஜன வாக்கெடுப்பின்றி வடக்கு - கிழக்கு இணைப்பு

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, நவ. 10

''சர்வஜன வாக்கெடுப்பு இன்றி வடக்கு — கிழக்கு மாகாணம் இணைக்கப்பட வேண்டும்.''

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இ. ராமேஸ்வரன், இ. ராமமூர்த்தி ஆகியோர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வியாழனன்று நடைபெற்ற ஆளும் கட்சி நாடாளுமன்ற குழுக் கூட்டத்தின் பின்பு மேற்படி இரு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் ஜனாதிபதி உரையாடினார்.

விடுதலைப் புலிகளும் உள்ளடக்கப்பட்டதாக அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதில்தான் தமிழ் மக்களும் உறுதியுடன் இருக்கின்றார்கள் என்றும் இவர்கள் இருவரும் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். (இ-21)

### 100 கோடி டொலர் செலவில்

# கொழும்புத் துறைமுகப்பகுதி அபிவிருத்தி செய்யப்படும்

கொழும்புத்துறைமுகத்தின் தென்பகுதித் திருப்புமுனை 100 கோடி அமெரிக்க டொலர் செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. மூன்று கட்டங்களில் இந்தப் பணி பூர்த்தி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது கட்டத்தின் கீழ் 20 கோடி டொலர் செலவில் பெரிய கப்பல்களையும், சிறிய கப்பல்களையும் தரித்து நிற்பாட்டக் கூடிய வகையில் குயீன் எலிசபேத்துறை விஸ்தரிக்கப்படும் என்றும்—

இரண்டாவது கட்டத்தின் கீழ் 40 கோடி டொலர் செலவில் நீர் தடுப்புப் பிரிவும், துறைமுகத்தை ஆழமாக்கும் பணியும் மேற்கொள்ளப்படும் என்றும்—

மூன்றாவது கட்டத்தின்கீழ் 40 கோடி டொலர் செலவில் 11 நங்கூரமிடும் பிரிவுகள் அமைக்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

தனியார் துறையின் பங்களிப்புடன் கொழும்புத்துறைமுக விஸ்தரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## தவறவிட்ட பயணப்பை

கடந்த ஏழாம் திகதி இரத்மலானையிலிருந்து பலாலிக்கு மூன்றாவது விமானம் மூலம் வந்த பயணி ஒருவரின் தவறவிடப்பட்ட பயணப்பை ஒன்று யாழ். மத்திய பஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரங்காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு பஸ்நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

# ஓடுகளுக்கு பதில் இந்தியாவிலிருந்து தகரத்தினாலான கூரைத்தகடுகள்!

## டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதிக்கு ஆட்சேபம்

கொழும்பு, நவ. 10

யாழ். குடாநாட்டின் புனரமைப்புப் பணிக்கு உதவும் திட்டத்தின் கீழ் இந்திய அரசாங்கத்திடம் இருந்து ஓடுகளுக்குப் பதிலாக தகரத்தினாலான கூரைத்தகடுகள் கொள்வனவு செய்யப்பட்டது தொடர்பாக ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஆட்சேபம் தெரிவித்து [illegible] ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில்புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு இந்திய அரசாங்கம் உதவிசெய்ய முன்வந்த வேளையில் ஈ.பி.டி.பி. அமைப்பினர் சிமெந்து, ஓடு முதலிய கட்டடப்பொருள்களை அனுப்பி வைக்குமாறு கேட்டிருந்தனர்.

வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையும் மேற் கூறிய பொருள்களையே சிபார்சு செய்திருந்தது.

ஆனால் தற்போது ஓடுகளுக்குப்பதிலாக 114 மெற்றிக் தொன் தகரத்தினாலான கூரைத்தகடுகளே அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகடுகள் குடாநாட்டின் காலநிலைத் தன்மைக்கு பொருத்தமற்றவை என்று டக்ளஸ் தேவானந்தா தமது கடிதத்தில்தெரிவித்துள்ளார்.

இக் கூரைத்தகடுகளை கொழும்பில் விற்று விட்டு அவற்றின் பெறுமதிக் கேற்ப ஓடுகளை குடா நாட்டுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய காலத்தில் ஓடுகள் அனுப்பப்பட்டிருந்தால் மக்கள் மழையால் தற்போது அனுபவிக்கும் பல்வேறு இடர்ப்பாடுகளைத் தவிர்த்திருக்கலாமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு ஓடுகள் தேவை என்று தெரிவிக்கப்பட்டும் தகரத்தினாலான கூரைத்தகடுகள் தருவிக்கப்பட்டது எங்ஙனம்? இந்தக் குளறுபடி குறித்து விசாரிக்க வேண்டும் என்றும் தேவானந்தா ஜனாதிபதியிடம்கேட்டுள்ளார். (இ-ரி)


**AL/99**
**கட்டுப்பாட்டுக் கணக்கு**
ஆரம்பம்: 10-11-97
திங்கள் - 4.00 மணி
ஆசிரியர்:
**முகுந்தன்**
**College of Commerce**
நாவலர்றோட்,
யாழ்ப்பாணம்.
(51071)


## ஏற்புத் தடை ஊசி மருந்து கிடைத்தது

தென்மராட்சி, நவ. 10

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நீண்ட நாள்களாகத் தட்டுப்பாடாக இருந்த ஏற்புத் தடை ஊசி மருந்து, விசர் நாய்க்கடி நோய்த் தடுப்பூசி மருந்து ஆகியவை வந்துள்ளன.

இந்த ஊசி மருந்துகள் இங்கு இல்லாததால் தென்மராட்சிப் பிரதேச மக்கள் யாழ். போதனா வைத்தியசாலை, மந்திகை வைத்தியசாலை ஆகியவற்றுக்குச் சென்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-117)


**விக்னா**
**கல்வி நிறுவனம்**
பொருளியல்
**திரு. விக்கி**
**AL 98**
சந்தைத் தோல்வியும் வெளிவாரி விளைவுகளும்
ஆரம்பம்:
**11 - 11 - 97**
3 - 4 மணி
(51066)


## 15 ஆயிரம் பனம் விதை இன்று நடுகை

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 25 ஆயிரம் பனை விதைகளை இம்மாதத்தில் நடுவதற்கு பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக அராலிப்பகுதியில் இன்று திங்கட்கிழமை 15 ஆயிரம் பனை விதைகளை நடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக பனை அபிவிருத்திச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-135)

## வீதியில் மயங்கி வீழ்ந்து மரணம்

நடந்து சென்ற வயோதிபர் ஒருவர் திடீரென மயக்கமுற்று வீழ்ந்து மரணமானார்.

இச் சம்பவம் கடந்த 29 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில், புலோலி வடமேற்கு முருகையன் கோயிலடியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சின்னையா-குலம் (வயது 64) என்னும் முதியவரே இவ்விதம் மரணமானவராவார். (ஐ-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக்கு சென்றமாணவியை கட்டாக்காலி நாய் கடித்தது

### பருத்தித்துறையில் சம்பவம்

வடமராட்சி, நவ. 10

பரீட்சை எழுதச் சென்ற மாணவி ஒருவர் கட்டாக்காலி நாயினால் கடியுண்டார்.

பருத்தித்துறை செட்டித் தெருவைச் சேர்ந்த கார்த்திகாயினி நவரத்தினராசா என்ற ஜி. சீ. ஈ சாதாரண தர வகுப்பு மாணவியே இவ்வாறு கட்டாக்காலி நாயினால் கடியுண்டவராவார்.

இம்மாணவி தனது வீட்டிலிருந்து பருத்தித்துறைவட இந்து மகளிர் கல்லூரியில் சைவ பரிபாலன சபையால் நடத்தப்பட்ட சமய பாடப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகச் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது குறுக்கே வந்த கட்டாக்காலி நாய் ஒன்று அவர் மீதுதாவி காலில் கண்டபடி கடித்துக் குதறியது.

பலத்த காயத்துக்குள்ளான மாணவி உடனடியாக மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப் பட்டுசிகிச்சை அளிக்கப்பட்ட பின்னரே கல்லூரிக்குச் சென்று பரீட்சை எழுதினார்.

இச்சந்திக்கு அண்மையில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் வகுப்பில் இருந்த நான்கு மாணவிகள் கட்டாக்காலி நாய் ஒன்றினால் அண்மையில் கடியுண்டது தெரிந்ததே. (ஐ-173)

# காவலில் இருந்தவரின் மரணம் இயற்கை மரணம் எனத் தீர்ப்பு

கொழும்பு, நவ. 10

இரத்மலானை விமானத் தளத்தை தாக்கி அழிக்கத் திட்டமிட்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த போது மரணமடைந்த சீவரத்தினம் சிவராசாவின் மரணம் இயற்கை மரணம் என கல்கிசை நீதிபதி தீர்ப்பு வழங்கியுள்ளார்.

வவுனியாவில் வைத்து சீவரத்தினம் சிவராசாவும் அவரது மகனும் கைது செய்யப்பட்டிருந்தனர். பின்னர் மகன் பிணையில் விடுவிக்கப்பட்டார். கல்கிசைப் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த சீவராசா கடந்த 2 ஆம் திகதி கொழும்பு ஆஸ்பத்திரியில் மரணமானார்.

மரணமடைந்தவர் நீரிழிவு நோயால் பீடிக்கப்பட்டிருந்தார் என்று சட்டவைத்திய அதிகாரி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது இதனையடுத்து நீதிபதி இயற்கை மரணம் என்று தீர்ப்பு வழங்கினார்.

(இ-5-21)

கொழும்பு நகருக்கு வரும்

# லொறிகளைச் சோதிக்க மூன்று நிலையங்கள்

கொழும்பு, நவ. 10

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இருந்து வரும் லொறிகளைக் கொழும்பு நகரினுள் அனுமதிப்பதற்கு முன் அவற்றைச் சோதனையிடுவதற்காக மூன்று சோதனை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

திருமலையில் இருந்து வரும் லொறிகளைச் சோதயிட ஹிதுல் உதுவ என்ற இடத்திலும்—

அம்பாறையில் இருந்து வரும் லொறிகளைச் சோதனையிட சியம்பலாண்டுவ என்ற இடத்திலும்—

மட்டக்களப்பில் இருந்து வரும் லொறிகளைச் சோதனையிட மன்னம்பிட்டியவிலும் சோதனை நிலையங்கள் அமைக்கப்பட விருப்பதாக ''சிலுமின'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

பொருள்களை ஏற்றி வரும் லொறிகள் இந்த நிலையங்களில் தடுக்கப்பட்டு பொருள்கள் அனைத்தும் முற்றாக இறக்கப்பட்டு சோதனையிடப்படும் என்றும்—

அத்துடன் லொறிகளின் டீஸல் தாங்கி, எஞ்சின் என்பனவும் தீவிரமாகப் பரிசோதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-164)

## மண்வெட்டி விநியோகம்

குடத்தனை, நவ. 10

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள குடத்தனை அம்மன், நாகர் கோயில் தெற்கு, செம்பியன்பற்று தெற்கு, மருதங்கேணி தெற்கு ஆகிய 5 விவசாயக் கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் அம்பன் கமநல சேவை நிலையத்தால் இலவசமாக மண்வெட்டி வழங்கப்படவுள்ளது.

வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள 300 தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு மண்வெட்டி வழங்கப்படும்.

(ஐ-ரீ)

# பருத்தித்துறையில் "ஹண்டி" கப்பல்

நீண்டகால இடை வெளிக்குப் பின்னர் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்துள்ள ''ஹண்டி'' கப்பலில் தனியாருக்கென சில லொறிகளும் எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்த லொறிகள் காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்துஇறக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளியன்று வந்து சேர்ந்த இக்கப்பலில் உள்ள அத்தியாவசியப் பொருள்கள் பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்கப்பட்டு வருகின்றன. (ஐ-173)

# 2 ஆயிரத்து 500 பேருக்கு மண்வெட்டி விநியோகம்

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள விவசாயிகளுக்கும், விவசாய கூலி ஆள்களுக்கும் புலோலி கமநலசேவை நிலையத்தில் வைத்து மண்வெட்டிகள் விநியோகிக்கப்பட்டன.

நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் உலக உணவு விவசாய நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இம் மண்வெட்டிகளை வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள 2ஆயிரத்து 500 பேர் பெற்றுக்கொண்டனர்.

(ஐ-173)

# துணைவேந்தர் எப்படி இருக்க வேண்டுமென இலக்கணம் வகுத்தவர் பேராசிரியர் துரைராஜா

**யாழ்.** பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அழகையா துரைராஜாவின் 63 ஆவது பிறந்த தினம் இன்றாகும். அன்னார் இன்று நம்மிடையே இல்லாவிடினும் அவரது நாமம் என்றும் எங்கும் நிறைந்திருக்கும். அவர் யாழ். பல்கலைக்கழகத்திற்கும் தனது சமூகத்திற்கும் ஆற்றிய சேவைகளை நினைவு கூருதல் நமது கடமையாகும்.

1974 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற யாழ். பல்கலைக்கழகம் காலத்துக்குக் காலம் பல சோதனைகளுக்கும் முகம் கொடுத்து தனது கல்விப் பணியைச் சிறப்புற ஆற்றி வருகிறது. அதன் துணை வேந்தராகப் பேராசிரியர் அவர்கள் 1988 தொடக்கம் 1994 வரை 6 ஆண்டு காலம் பணிபுரிந்தார்.

அக்காலம் யாழ். பல்கலைக்கழக வரலாற்றில் மிகவும் நெருக்கடியான காலகட்டமாகும். இந்திய ராணுவ நடவடிக்கைகள், அதன் பின்னர் 1990 இல் ஏற்பட்ட யுத்தச் சூழ்நிலை, அதன் காரணமாக ஏற்பட்ட பொருளாதாரத் தடை, கல்விமான்களின் புலம்பெயர்வு. மின்சாரம் இன்மை, எரிபொருளின்மை, போக்குவரத்து தொடர்பு சாதனச் சீர்குலைவு, குண்டுவீச்சு, ஷெல்வீச்சு ஆகியவற்றுக்கு மத்தியில் ஊழியர்களின் உயிராபத்து நிறைந்த நாளாந்தப் பயணம் ஆகியவை அவரது பதவிக்காலத்தில் யாழ். பல்கலைக்கழகம் எதிர்நோக்கிய பிரதான பிரச்சினைகளாகும்.

இவை அனைத்திற்கும் மத்தியிலும் தனது தனித்துவம் மிக்க நிர்வாகத் திறமையால் உன்னத நிலையில் பல்கலைக்கழகத்தைக் கொண்டு நடத்தியது மட்டுமன்றி, பலபுதிய கற்கைத்துறைகளையும் ஏற்படுத்தியமை அவரது சிறந்த ஆளுமைக்கு எடுத்துக் காட்டாகும்.

### நிறைகுடமாக விளங்கியவர்


பல்கலைக்கழகத்தின் உன்னத நிலைக்கு அவரது சிறந்த பண்புகளே காரணமாக அமைந்தன. ஒரு துணை வேந்தர் எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு இலக்கணம் வகுத்தவர் அவர். திரிகரண சுத்தியுடன் செயற்பட்டவர். எந்த நிலையிலும் நிதானம் தவறாத ஒரு நிறைகுடமாக விளங்கினார். அவரது மூகத்தில் சாந்தமும் அமைதியும் எப்பொழுதும் நிறைந்திருக்கும். இந்த நிதானப் போக்கும் அன்பான வார்த்தைகளும் மனிதநேயமுமே துணை வேந்தரின் வெற்றிக்கான ஆயுதங்களாகும். இவற்றுக்கு அடிபணியாதவர்கள் எவருமே இல்லை எனக் கூறலாம். தனது அலுவலகத்திலிருந்தபடியே அன்பினால் ஆணையிட்டு அனைத்தையும் நிறைவேற்றுவார். எவரும் எப்பொழுதும் அவரை அணுகலாம். எத்தகைய பிரச்சினைகளுடன் அவரிடம் சென்றாலும் அவரது சாந்தமும் வசீகரமும் பிரச்சினைகளின் சுமையை உடனடியாகக் குறைத்துவிடும்.

பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியில் கண்ணுங் கருத்துமாக இருந்து அவர்கள் தமது கல்வியை யுத்தச் சூழ்நிலையிலும், பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியிலும்இடையூறின்றித்தொடர்வதற்கு பல வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார்.

மேலும் வறிய மாணவர்கள் பொருளாதார நெருக்கடியினால் தமது கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்குடன் ''துணைவேந்தர் நல நிதியத்தை'' ஏற்படுத்தினார். அதன் மூலம் மாதந் தோறும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இன்றும் பயனடைகின்றனர்.

மேலும் வெளிநாடுகளில் உள்ளவர்களுடன் தொடர்பு கொண்டு தமது முயற்சியினால் மேலும் பல வறிய மாணவர்களுக்கு மாதந் தோறும் உதவிப்பணம் கிடைக்க வழி செய்தார்.

தகுதியிருந்தும் பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்ட மாணவர்களும் தமது பட்டப் படிப்பினைத் தொடர்வதற்காக யாழ். பல்கலைக்



பேராசிரியர் அ துரைராஜா

கழகத்தில் ஒரு வெளிவாரிப் பரீட்சைப் பகுதியை ஏற்படுத்தினார்.

பல்கலைக்கழகம் அதனைச் சார்ந்த சமூகத்திற்கும் தனது பங்களிப்பை நல்க வேண்டும் என்ற நோக்குடன் அவரது காலத்தில் தொழிலாளர் கற்கைநெறி, புறநிலைக்கற்கை அலகு ஆகியவை ஏற்படுத்தப்பட்டன. மேலும் இன்றும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் யாழ். விஞ்ஞான சங்கத்தின் ஸ்தாபகர் அவரேயாவார். யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஆராய்ச்சித் துறையிலும் ஈடுபடவும் சிறந்த ஆராய்ச்சிகளை பல்கலைக்கழகத்தின் வெளியீடாக வெளியிடவும் தேவையான நிதிவசதியை ஏற்படுத்தியவர் பேராசிரியர் துரைராஜா அவர்களே. இது பல்கலைக்கழகத்தின் கல்விசார் துறையில் ஒரு மைல் கல்லாகும்.

### பொறியியல் பீடம்

யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல்பீடம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசை இணங்கச் செய்து அதனைத் தொடங்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபட்டார். விவசாயக் கல்வி என்பது ஒரு சான்றிதழ் பெறும் கல்வியோடு முடிந்து விடாமல் விவசாயக் கல்வி பயிலும் மாணவர்கள் விவசாயிகளின் நாளாந்த பிரச்சினைகளில் பங்களிப்பு செய்ய வேண்டும் என்ற நோக்குடன் விவசாய பீடத்தினை கிளிநொச்சியில் நிறுவினார். இவற்றைவிட அவர் யாழ். பல்கலைக்கழகத்தின் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியவை.

துணைவேந்தர் துரைராஜா ஊழியர் நலன்களைக் கவனிப்பதில் அக்கறை உடைய நிர்வாகியாகவும் விளங்கினார்.

### நீதியை நிலைநாட்ட போராடியவர்

யாழ். பல்கலைக்கழகத்துடன் மட்டும் அவர் தனது சேவையை மட்டுப்படுத்திக் கொள்ளாமல் இக்கட்டான காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய கல்வி நிறுவனங்களும் தமது கல்விப்பணியைத் தொடர்வதற்கு அவர் பல்வேறு வழிகளிலும் தனது ஒத்துழைப்பை நல்கினார். குறிப்பாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். நிலையம் மூடப்படாமல் தொடர்ந்து இயங்குவதற்கு அவரது முயற்சியே காரணமாகும்.

தமிழ் மாணவர்களின் உயர் கல்வியில் ஏற்பட இருந்த அநீதியை நீக்கும் பொருட்டு, தமிழ் மாணவர்களுக்காக நடத்தப்பட்ட க. பொ த. உயர்தர விசேட பரீட்சையை பல்கலைக்கழக அனுமதிக்குத்தனியான பரீட்சையாகக் கணிக்க அரசு முற்பட்ட சந்தர்ப்பத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் துணை நின்று நீதியை நிலைநாட்டியமை அவரது துணிவான செயல் திறனுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

தமது சமூகம் சலுகைகளுக்காகக் கையேந்தாமல் உரிமைகளோடு வாழவேண்டும். என்பதில் அவர் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். தமது எந்த செயற்பாடுகளையும் புகழை விரும்பி மேற்கொள்ளாதவர் இவரது பணி கல்வி, சமூகம் என்பவற்றுடன் மட்டும் நின்றுவிடாது ஆன்மீகத்துறைக்கும் பரவியது. இவர் ஒருசிறந்த சமயப்பற்றாளர்.

வெளிநாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களிற்கும் கூடத் துணைவேந்தராகப் பதவி வகிக்கக்கூடிய அத்தனை தகுதிகளைக் கொண்டிருந்தும் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பதவியை ஏற்றுக் கொண்டமை அவர் தனது சமூகத்தின் மீது கொண்டிருந்த பற்றை எடுத்துக்காட்டும் ஒரு சிறந்த உதாரணமாகும். பேராசிரியர் துரைராஜா அவர்கள் தனது சமூகத்தவரிடையே மட்டுமன்றி தென்னிலங்கைக் கல்விமான்களாலும். அரசாங்க அதிகாரிகளினாலும் அரசியல் வாதிகளாலும் நன்கு மதிக்கப்பட்டவர். ''துரை'' என எல்லோராலும் அவர் அன்புடன் அழைக்கப்பட்டவர்.

துணைவேந்தருடைய கடமையுணர்வையும் ஆளுமையையும், பரந்த மனப்பான்மையையும் மனித நேயத்தையும் யாராலும் அளவிடமுடியாது.

அவரால் அவர் வகித்த பதவிகள் பெருமையடைந்தனவேயன்றி பதவிகளால் அவர் பெருமையடைந்திலர். சில வெற்றிடங்கள் நிரப்பப்பட முடியாதவை. அதில் பேராசிரியர் துரைராஜாவின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடமும் ஒன்றாகும். ★

க. கனகரத்தினம்
சிரேஷ்ட உதவி நிதியாளர்
யாழ். பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி விழா

13-11-97 அன்று நடைபெறும்
அகில இலங்கை சைவக் குருமார்
அர்ச்சகர் சபை

நடத்தும் வெள்ளி விழா சிறப்புற இருபாலை கற்பக விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

**சுவஸ்திகை ரெக்ஸ்**
(புடைவை விற்பனையாளர்கள்)
இருபாலைச்சந்தி, கோப்பாய்.

(சி/1990)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 03 | 22 |
| 10 | 10 |
| 1925 | 1996 |

திருமதி
## இளையபெருமாள் சின்னக்கண்மணி
(ஆத்தை)

திதி: 10-11-1997

ஆலமரமென வளர்ந்தீர்கள்
விழுதுகளென விதை பரப்பினீர்கள்
நாம் இன்று உலகெலாம் பரந்துள்ளோம்.
ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவுடன் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

இ. அமரசேனாதிபதி,
வைகுண்டம்,
வல்வெட்டித்துறை.

(51032)

## கிளைமோர் கண்ணிவெடி மீட்பு

நெல்லியடி, நவ 10

மாலுசந்திக்கும் நெல்லியடிக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள மாடிக் கட்டடம் ஒன்றிலிருந்து கிளைமோர் கண்ணிவெடி ஒன்று படையினரால் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சனி காலை அப்பகுதிக்குச் சென்ற படையினர் இதனை மீட்டனர்.

இதனால் இப்பகுதிஊடாக போக்குவரத்து சில மணி நேரம் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. (இ-109)

## ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ். கல்வித்திணைக்களம் வலயம்-1 இன் யுனெஸ்கோ கழக ஒன்றுகூடல் விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலயம் - 1, கல்விப்பணிப்பாளர் எஸ். இரத்தினராசா, திருமதி யோ. இரத்தினராசா ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகவும், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி க. பொன்னம்பலம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (இ-5)

## 2 மீனவர்கள் கரை திரும்பவில்லை

செம்பியன்பற்று, நவ. 10

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளத்தில் இருந்து கடந்த 2-ஆம் திகதி தொழிலுக்குச் சென்ற இரு மீனவர்கள் இன்னும் கரைசேரவில்லை.

கட்சன் (வயது-20) மயூரன் (வயது- 33) ஆகியோரே இந் மீனவர்கள் ஆவர். (இ-36)த

## உபநூலகம் திறப்பு

செம்பியன்பற்று, நவ 10

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று உப நூல் நிலையம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மீண்டும்திறக்கப்பட உள்ளது.

கடந்த ஒன்றரை வருடங்களாக இந்த நூல் நிலையம் மூடப்பட்டு இருந்ததால் பாடசாலை மாணவர்கள் பரீட்சைக்குத் தேவையான வழிகாட்டல் நூல்களை பெற முடியாமல் இருந்தது. (ஐ-36)

ஆசிரிய சேவையில் உள்ள
## பட்டதாரி பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைத்தது

பட்டதாரி வேலை வாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சியைப் பூர்த்தி செய்த பட்டதாரி பயிலுநர்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாண பொது சேவை ஆணைக்குழு, இலங்கை ஆசிரிய சேவையின் இரண்டாம் வகுப்பின் முதலாம் தர உதவி ஆசிரியர்களாக நியமனம் வழங்கி உள்ளது.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து இவர்களுக்கான சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ளதாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சொ. அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

திட்ட செயற்படுத்துகை இன உறவு தேசிய ஒருமைப்பாட்டமைச்சின் பட்டதாரி வேலை வாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இப் பட்டதாரி பயிலுநர்கள் 1994 நவம்பர் மாதம் முதல் ஆசிரியர்களாக சேவை புரிந்து வருகின்றனர். (ஐ-152)

# ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 25 | 11 |
| 04 | 11 |
| 1929 | 1996 |

## எட்வேட் இராசரெத்தினம் ஆசீர்வாதம்
(இளைப்பாறிய உப அதிபர், நல்லூர் தெற்கு விக்கினேஸ்வரா வித்தியாலயம்)

''மண்மீது நாம் குடியிருக்கும் இக்கூடாரம் தகர்ந்து வீழ்ந்தாலும், கடவுளிடமிருந்து கிடைத்த வீடு ஒன்று நமக்கு விண்ணில் உள்ளது.''
(2 கொரிந்தியர் 5 அதி 1 வச)

ஓராண்டு கழிந்ததையா ஒப்பற்ற எம்தலைவா!
சீராக வளர்த்து எமமைச் சிறப்புடனே
வாழவைத்தாய்
பல் கலையும் பயிற்றுவித்துப் பாரினிலே துலங்க
வைத்தாய்
கல்லறையில் வைத்து உனைக் கண்கலங்கி
நிற்கின்றோம்
எந்நாளும் உனை மறவோம் எம் அருமைப் பப்பா!

உம் ஆன்மா சாந்திபெற உன்னதரை வேண்டி நிற்கின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 11-11-97 காலை 6.00 மணிக்கு புனித மரியாள் தேவாலயத்தில் (O. L. R.) இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அவர் பிரிவால்துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரர்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
திருமதி மே. யோ. ஆசீர்வாதம்,
41, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்

(சி/2012)

# விண்ணக வாழ்வின் ஓராண்டு நிறைவு





| மோசஸ் யேசுதாசன் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்) | | பிலோமினா அருளப்பு | |
|---|---|---|---|
| மண்ணில்: | விண்ணில்: | மண்ணில்: | விண்ணில்: |
| 1945-05-31 | 1996-11-05 | 1926-11-14 | 1996-11-10 |

கிறிஸ்துவோடு இறந்தோமானால்
அவரோடு வாழ்வோம் (2 திமோ - 2: 11)

ஆண்டொன்று போயும் ஆறவில்லை எம்துயரம். ஆண்டவனிடம் எம் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம். மீண்டும் நாம் விண்வீட்டில் உங்கள் முகம் கண்டு மகிழும் வரை உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது.

10.11-97 திங்கள் மு. ப 11-00 மணிக்கு இல்லத்தில் நடைபெறும் இவர்களின் வாழ்வுக்கான நன்றி வழிபாட்டிலும், தொடர்ந்து நடைபெறும் உபசரணையிலும் பங்குகொள்ளுமாறும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், உறவினர்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

''ஜெயமகால்''
K. K. S. றோட், சுன்னாகம்.

(51064)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| இவ்வுலகம்: | இறைவனடி: |
|---|---|
| 16 | 22 |
| 09 | 10 |
| 1924 | 1996 |

## நடராசா செல்வராசா
(ஓய்வுபெற்ற உணவுக் கட்டுப்பாட்டு திணைக்கள களஞ்சியப் பொறுப்பாளர்)

திதி:- 10 — 11 — 1997

ஆண்டு ஒன்று சென்றாலும் தங்களின் அன்பும், கருணையும், பாசமும் எங்கள் மனதைவிட்டுநீங்காது. தங்களின் ஆன்மா சாந்தியடைய மாத்தனை முருகனை பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, மகன், மகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனர், சகோதரி.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தகவல்:-
செ. அருந்ததி (மனைவி)
மணியகாரன் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(49833)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மனியில் இருந்து

# 4 பெண்கள் உட்பட 7 தமிழர்களின் நாடு கடத்தல் இடைநிறுத்தம்

கொழும்பு, நவ. 10

ஜேர்மனியில் அரசியல் புகலிடம் நிராகரிக்கப்பட்ட 4 பெண்கள் உட்பட ஏழு இலங்கைத் தமிழர்களை நாடு கடத்துவது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு உட்பட இலங்கை நிலைவரம் இதுவரை தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பானதாக இல்லை என்றும்—

சுமுகமான சூழ்நிலை திரும்பும் வரை நாடு கடத்த வேண்டாம் என்றும்—கோரி மேற்படி ஏழு பேரும் பிராங்போர்ட் விமான நிலையத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இரு வாரங்களாக உண்ணாவிரதம் நீடித்ததையடுத்தே நாடு கடத்தல் தற்காலிகமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

சந்திராதேவி கருணாமூர்த்தி (வயது-30)—பலாலி, இவரது மகள் தாரணி (வயது-8), சந்தியா இரத்தினம் (வயது-26) — அச்சுவேலி, ஜெயராணி சந்திரன் (வயது-27) — கிளிநொச்சி, பிரான்சிஸ் சேவியர்குமார் (வயது-16) — ஏழாலை, ஜெயராஜா சுரேஸ் (வயது-17) — வல்வெட்டித்துறை, சுப்பிரமணியம் நடராஜா (வயது-32) — வட்டக்கச்சி ஆகியோரே இந்த ஏழு இலங்கைத் தமிழர்களும் ஆவர். (இ-5-21)

# புலிகளின் வழக்குத் தீர்ப்பு வர இரண்டுவருடங்கள் செல்லலாம்

கொழும்பு, நவ 10

''அமெரிக்க அரசாங்கத்துக்கு எதிராக விடுதலைப் புலிகள் அமைப்பு தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு வெளிவர இரண்டு வருடங்கள் செல்லலாம்''

இலங்கையரான அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்றின் பேராசிரியர் சாம் சமரசிங்க பி.பி.சி சிங்களச் சேவைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மீதான தடையை ரத்துச் செய்யுமாறு அமெரிக்காவில் வழக்குத் தாக்கல் செய்திருந்தாலும் நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாகும் வரை தடை அமுலில் இருக்கும்.

தீர்ப்பு மூலம் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படுமானால் அரசு அதற்கு எதிராக அப்பீல் செய்ய முடியும். அப்பீல் தீர்ப்பு வரும் வரை விடுதலைப் புலிகள் செயல்பட முடியும்.

புலிகள் சார்பாக முன்னாள் சட்டமா அதிபதி றம்ஸி கிளார்க் ஆஜராகியுள்ளார்.

இவர் வலதுசாரி போக்குடையவர். ஈராக் மீது அமெரிக்கா படை எடுத்த போது யுத்த பாதிப்புகளை ஆராய சபை ஒன்றை அமைத்தவர்.

அத்தகைய பிரபல்யமான வரை விடுதலைப் புலிகள் சட்டத்தரணியாக நியமனம் செய்துள்ளதன் மூலம் இவ் விவகாரத்துக்கு பிரபல்யம் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-21)

# காங்கேசன் ஆலை ஊழியர்களின் வாழ்க்கையில் விடிவு பிறக்குமா?

நாட்டின் பொருளாதாரத் துறையில் முக்கிய இடத்தைப் பெற்றதும்—

குடாநாட்டில் ஆயிரக்கணக்கான ஏழைக் குடும்பங்களின் வாழ்வை உயர்த்த முக்கிய காரணியாக இருந்ததும்—

காங்கேசன் துறையில் அமைந்துள்ள சிமெந்துத் தொழிற்சாலைதான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் இன்று அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டுக் கிடக்கிறது. அந்தத் தொழிற்சாலையில் பணியாற்றிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அரைவயிற்றுடன் நடைப் பிணங்களாக வலம் வருகின்றனர்.

1950ம் ஆண்டு காங்கேசன் துறையில் சிமெந்து தொழிற்சாலை நிறுவப்பட்டது. அத் தொழிற்சாலை மூலம் புத்தளம், காலி ஆகிய இடங்களில் இரு தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. இன்று அத் தொழிற்சாலைகள் தலை நிமிர்ந்து நிற்கின்றன. அங்கு பணியாற்றும் ஊழியர்கள் தமது வாழ்வை வளமாக்கி சந்தோஷமாக வாழ்கிறார்கள்.

ஆனால் காங்கேசன்துறை ஆலை கடந்த 7 வருட காலமாக மூடப்பட்டுக் கிடக்கிறது. அங்கு பணியாற்றிய ஊழியர்களுக்கு மாத வேதனம் மட்டும் வழங்கப்படுகிறது. அவர்களுக்கான சம்பள உயர்வு, காப்புறுதி, வருடாந்த போனஸ், மேலதிக வேலைக் கொடுப்பனவு எல்லாம் நிறுத்தப்பட்டு வழங்கப்படும் வேதனம் அவர்களின் அரைமாத வாழ்க்கையை ஓட்ட மட்டுமே போதுமானதாக உள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டு சின்னா பின்னப்படுத்தப்பட்டுள்ள தொழிற்சாலையின் 70சதவீதமான தொழிலாளர்கள் கடந்த 7 வருட காலமாக அகதி வாழ்க்கை நடத்துகிறார்கள். இருக்க இடமின்றி சிறு கொட்டில்களிலும், அகதி முகாம்களிலும் வாழ்க்கை நடத்தும் அவர்கள் தமக்குப் பழைய வாழ்க்கை மீண்டும் வராதா என்ற ஏக்கத்துடன் இருக்கிறார்கள். இந்த ஏக்கத்தினால் தொழிற்சாலையின் மிகவும் அனுபவம் வாய்ந்த தொழிலாளர்கள் சிலர் மாரடைப்புக் காரணமாக மரணித்தும் உள்ளார்கள்.

இந்த ஏழைத்தொழிலாளர்களில் கணிசமானோர் தமது பிள்ளைகளுக்கு கல்வி அறிவு ஊட்டவோ, போஷாக்கான உணவைக்கொடுக்கவோ முடியாத அவல நிலையில் காலத்தை ஓட்டுகிறார்கள்.

''எப்போது எமது தொழிற்சாலை திறக்கப்படும், எப்போது எமக்கு மறுவாழ்வு கிடைக்கப்போகிறது'' என்ற ஏக்கம் அவர்களைத்தினம் தினம் வாட்டிக் கொண்டிருக்கிறது.

தென்னிலங்கையில் இப்படியான நிலை ஏற்பட்டிருந்தால் அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்குமா? தமிழ்த் தொழிலாளர்கள்தானே எப்படியாவது போகட்டுமே என்று அதிகாரிகள் வாளாவிருக்கிறார்களா?

தொழிலாளர்களின் அவல வாழ்க்கைக்கு விடிவு காண அமைச்சர் சி. வி. [illegible] தினாவை கடந்த [illegible] ஆம் திகதி ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள். தொழிற்சாலையை இயக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்த அமைச்சர் அவர்களது கோரிக்கைகளை— வாழ்க்கைப்படி, இடைக்கால அலவன்ஸ் ஆகியன தொடர்பாக— மனிதாபிமான அடிப்படையில் பலிசீலிப்பதாகத் தெரிவித்தார்.

இந்தக் கோரிக்கைகளுக்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால், சாத்வீக வழியில் போராட்டம் நடத்த வேண்டிய நிலைக்கு தொழிலாளர்கள் ஆளாக வேண்டிய நிலை ஏற்படும்.

குடாநாட்டின் இயல்பு நிலை திரும்புவதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதும், இந்தத் தொழிலாளர்கள் போன்று ஏனைய துறைகளில் உள்ள தொழிலாளர்களும் கடந்த 7 வருடங்களாக அனுபவித்து வரும் அவல வாழ்வுக்கு எப்போது விடிவு வரும் என்ற ஏக்கம்தான் இன்று குடாநாட்டில் விஞ்சி நிற்கின்றது.

இந்தத் தொழிலாளர் வர்க்கத்திற்கு விடிவு கிடைக்குமா? தமிழ்த் தொழிலாளர்கள் தானே என்று அரசு [illegible] வருமா? ★

தமிழர் பிரதேசங்களில் யுத்தம் உண்டாக்கிய அனர்த்தங்கள் மிகப் பல. குடாநாட்டின் தொழில் வளம் மடிந்து போனதும் அவற்றில் ஒன்று. அதனால் தொழிலாளர்கள் அனுபவித்த, அனுபவிக்கின்ற அவலங்கள் சொல்லொணாதவை.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டது. எனினும் அதனைப் புனர்நிர்மாணம் செய்து இயக்குவது தொடர்பாக எதுவித நல்ல அறிகுறியும் இன்னும் இல்லை.

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை ஊழியரின் தொழிற்சங்கமான சிமெந்து பொதுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அந்தக் கூட்டத்தில் தொழிலாளரின் நிலையை வெளியே எடுத்துக் காட்டுவதற்கு சாத்வீகப் போராட்டம் நடத்துவது குறித்து ஆராயப்படவுள்ளது.

தங்கள் உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு மறுவாழ்வு கிடைக்குமா என்ற ஏக்கத்தை வெளியிடுகிறார் சங்கத்தின் தலைவர் எஸ். தங்கராசா.

[சந்திப்பு: ஊாவை குகன்]

ராகிங் கொலைக்கொடுமை; யாழ்ப்பாணத்து உணர்வலை

# சூரன்கள் அழியவில்லை

'ராகிங்' வதைக்கு தற்காலக் கல்வி முறையும் வாழ்க்கை முறையுமே மூல காரணங்கள் என்று ஆழமாக ஆராய்கிறார் தாவடியைச் சேர்ந்த எஸ். ஆர், சரவணபவன்:

யாழ்ப்பாணத்தில் (பகிடிவதைக்கு) 'ராகிங்' எதிரான உணர்வலைகள் வெளிப்படவில்லை என்று உதயன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இது ஆச்சரியப்படத்தக்க ஒரு விடயமல்ல. ஏனெனில் இச்சம்பவம் எமது தற்கால நடைமுறை வாழ்க்கையினதும், கல்வி முறையினதும் ஒரு வெளிப்பாடே.

'ராகிங்' செய்தவர்களும், பாதிக்கப்பட்டவரும் யாழ்ப்பாணத்தவரே என்பது தெரியவந்துள்ளது. அவர்கள் அனைவரும் யாழ்ப்பாண இந்துக்கள் என்று மேலும் சுருக்கலாம்.

எமது இந்து சமூகத்தின் வாழ்க்கை முறைக்கும், இந்து தத்துவங்களுக்குமிடையே பெரியதொரு இடைவெளி ஏற்பட்டு விட்டது வாழ்க்கை வேறு, சமயம் வேறு என்பதாகி விட்டது.

அத்துடன் பணம் சம்பாதிப்பதற்கான ஒரு வழிமுறையே கல்வி என்றாகி விட்டது. ''கல்வியின் விளைவு ஒழுக்கம்'' என்றஉயர் விழுமியங்கள் புறக்கணிக்கப்பட்டு, ''ரியூசன்'' ஆதிக்கம் செலுத்துகிறது.

ஒரு பௌத்தருக்கு அவரது வழிபாட்டுத் தலங்களின் 'தர்ம' பாடசாலைகள் மூலம் சமய தத்துவங்களும் ஒழுக்கக் கல்வியும் புகட்டப்படுகின்றன. ஒரு கிறிஸ்தவருக்கு அவரது வழிபாட்டு நிலையத்தில் அவர்களுடைய சமய போதனைகளையும், ஒழுக்கத்தையும் சமூக மேம்பாடுகளையும் கற்பிக்க விசேட பயிற்சி பெற்ற சமய போதகர்கள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒரு முஸ்லிமுக்கு அவருடைய வணக்க ஸ்தலத்தில் விசேட பயிற்சி பெற்ற மௌலவிகள்மூலம் இஸ்லாமிய ஒழுக்கம், பண்பாடு என்பன சொல்லிக்கொடுக்கப்படுகின்றன.

இந்துக்களாகிய எமது நிலை என்ன?

தத்துவங்கள் நிறைந்த சமயம், மிகவும் பழைமை வாய்ந்த சமயம் என்ற பெருமை எமக்குண்டு. ஆனால் நடைமுறையில் இவை எதுவுமே எமது நாளாந்த வாழ்க்கையில் வரவில்லை. ஆலயத்தின் பூசை முறைகள், விழாக்கள் எல்லாம் உயர்ந்த தத்துவத்தையும் ஒழுக்க முறையையும் போதிக்கின்றன. ஆனால் அவை எதுவுமே எமக்கு விளங்கவில்லை.

உதாரணமாக கந்த சஷ்டி விரதம் பக்திபூர்வமாக அனுசரித்தோம். உபவாசம் இருந்தோம் சூரன்போர் பார்த்தோம். பாறணை முடிந்த 2 நாள்களில் இறைச்சிக் கடையில் ஒரே கூட்டம் இறைச்சிக்குத் தட்டுப்பாடு அதிகாலையிலேயே கூட்டம்.

எமக்குள்ளே உள்ள உட்பகைவர்களான காம, குரோத, லோபமோக, மத, மாச்சரியம் என்ற 6 பேர் உள்ளனர். இவர்களையே சூரன் என்று உருவகப்படுத்தி அதனை அழிக்க வேண்டும் என்ற போதனை எமக்கு எடுபடவில்லை. சூரன் போர் திருவிழாப் பார்த்து விட்டு வருகிறோம். எமக்குள் உள்ள சூரன் மிகவும் பாதுகாப்பாக உள்ளே வளர்ந்து கொண்டிருக்கின்றான். ஆலயங்களுக்கு இத்தனை கூட்டம் மேளம், இன்னாருடைய சங்கீதக் கதாப்பிரசங்கம், இன்ன குழுவின் இசை நிகழ்ச்சி என்று விளம்பரப்படுத்தி மக்களை வரவழைக்க வேண்டிய நிலை. ஏனைய சமய வணக்க ஸ்தலங்களின் இவ்வாறான கலை நிகழ்ச்சிகளை நடத்தி மக்களை வரச் செய்ய வேண்டிய நிலை இல்லை விடிய விடிய திருவிழா நடக்கும் விடிந்தபின் வெளிவீதியில் வீற்றிருக்கும் சுவாமியை உள்ளே கொண்டு சென்று வைக்க ஆள் தேடுகின்ற நிலை.

இன்றைய கல்வி முறைக்கும், கல்வியின் உயர்ந்த விழுமியத்திற்கும் தோன்றியுள்ள பெரும் இடைவெளியும் இந்து சமய தத்துவங்களுக்கும் — இந்துக்களின் நடைமுறை வாழ்க்கைக்குமிடையே தோன்றியுள்ள பெரிய இடைவெளியுமே இந்த நிலைக்கு காரணம்.

அன்பு, இரக்கம், கருணை, பரிதாபப்படுதல், உதவும் பண்புகள் எல்லாம் வரண்டு விட்டன. ஒருவன் வேதனையில் இருக்கும் போது அதனை பார்த்து ரசிக்கும் நிலை மேலோங்குகிறது. இது இன்றைய யாழ்ப்பாணத்து இந்துக்களின் அவலநிலை; ஆபத்தான நிலை.

இந்து சமயத்தின் பெயரில் இயங்கும் ஸ்தாபனங்களும் பெரியோர்களும் ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுத்து இந்த இடைவெளியைக் குறைப்பதன் மூலமே நிலைமை மாற்றமடையும் சிந்தனையில் மாற்றம் வேண்டும் இல்லையேல் இந்த 'ராகிங்' மரணம் ஓர் ஆரம்பமாகவே இருக்கும் இன்னும் தொடரவே செய்யும் என்று கூட எதிர்பார்க்கலாம். ★

# அளவு வகுக்க முடியாதது

கல்வியங் காட்டைச் சேர்ந்த சட்டத்தரணி கனகசபை நடராசா பகிடிவதையைச் சிறிய அளவு பெரிய அளவு என்று பிரித்துப் பார்க்க முடியாது அது முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

அளவுக்கு அதிகமான பகிடிவதை கூடாதாம்.

மேற்படி ஒருகருத்தை யாழ். பல்கலைக்கழக இரண்டாம் வருட வர்த்தகப்பிரிவு மாணவன் 05-11-97 உதயனில் தெரிவித்திருக்கிறார் அதன் பிரகாரம் பகிடிவதையை நிறுத்தினால்—

(i) புதிய மாணவருக்கும் மூத்த மாணவருக்கும் இடையில் எந்தவித நட்புறவையும் வளர்க்காமல் தடுப்பதற்கு வழி வகுக்குமாம்.

(ii) புதிய மாணவர்கள் கூச்சம் பயம் உள்ளவர்களாக காணப்படும் போது அளவான முறையிலான பகிடிவதை அவர்களை அனைவருடனும் பழகுவதற்குத் தயாராக்குமாம் இது நல்ல நோக்கமாம்.

(iii) ஆனால் சில மாணவர்களின் அத்து மீறிய செயல்களினால் தான் சில பிரச்சினைகள் எழுகின்றனவாம்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கடைக்குரிய சோக்கேஸ் (Show Cases) வகைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 390, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [51056]

இளம் சோடிகள் - வான் கோழிகள், மணித்தாரா, கினிக்கோழி, சில்க்கி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: லிங்கமூர்த்தி மயூரன், நவாலி, அரசடி, மானிப்பாய். [51052]

404 கார்க்கண்ணாடி புதியது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Bond, யாழ்ப்பாணம். (51062)

## மணமகள் தேவை

இங்கிலாந்தில் நிரந்தர வீடும், பொன்சரில் கூப்பிடும் தகைமையும், கவர்ச்சிகரமான சம்பளமும் கொண்ட வயது 28 A/L படித்த பரணி நட்சத்திர இந்து உயர்குல மணமகனுக்கு அழகான, நிறமான, படித்த மணமகள் தேவை. தொடர்பு: நேரில் Ram Live LongGuide, 39, K.K.S. வீதி, கொக்குவில். (51049)

அத்த நட்சத்திரம், 33 வயது ஆசிரியருக்கு படித்த மணமகள் தேவை. அம்பாள் திருமண சேவை, ஸ்ரீலங்கா அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். (51058)

## வினாததாளகள

புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள்கள் விற்பனைக்கு வந்துவிட்டது. தொடர்பு: Bond, யாழ்ப்பாணம். (51063)

## திருமணசேவை

மிருகசீரிடம் 29 வயது B. Sc. Computer மணமகனுக்கு C.I.M A. பட்டதாரி மணப்பெண் தேவை. கிராம சேவையாளர் வேறு குறிப்புகளும் உண்டு. தொடர்பு: விநாயக திருமணசேவை, 11, முதலாம் ஒழுங்கை. நீராவியடி. [51029]

## நூலகம்

தரமான நூல்களை வாசித்து வாசிப்புப் பழக்கத்தை விருத்திசெய்ய நாடுங்கள்: லிங்க் லெண்டிங் லைபிரெறி 41, தபாலக வீதி, சாவகச்சேரி, Ling Lending Library. [50932]

## பொலன்னறுவை பகுதியில் தாக்குதல்

பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள நாகசேனையில் கடந்த வெள்ளி காலை 7 மணியளவில் இராணுவத்தினர் மறைந்திருந்து தாக்கியதில் இரு விடுதலைப் புலிகள் இறந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ–5)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாத நோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள். மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
**சி. இராசரத்தினம்**
121, 2ஆம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(51060)

# 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம், 17 — 01 — 1923
மறைவு: 02 — 10 — 1997

## அமரர் நமசிவாயம் நடராசா

(கல்வயல் ஐயனார்கோயிலடி, சாவகச்சேரி)

எமது ஐயா இறையடி எய்தியதை நினைவு கூர்ந்து 11 – 11 – 97 அன்று செவ்வாய்க்கிழமை எமது இல்லமான ''நிர்மலகிரியில்'' நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், சுற்றத்தார் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''நிர்மலகிரி',
ஐயனார் கோயிலடி,
கல்வயல்,
சாவகச்சேரி.
(51019)

# கேள்வி அறிவித்தல்

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

09 - 11 - 97 ''உதயன்'' இதழில் பிரசுரிக்கப்பட்ட எமது 08 - 11 - 97 ஆம் திகதிய, இரும்புக் கட்டில்கள், வைத்தியசாலை சிறிய அலுமாரிகள் தொடர்பான கூறுவிலை கோரும் விளம்பரத்தில், விண்ணப்பப் படிவங்களை 10 - 11 - 97 க்கு முன் பெற்றுக் கொள்ளலாம் என்றிருப்பது 10 - 11 - 97 முதல் எனத் திருத்தப்படுகின்றது.

வைத்திய கலாநிதி
**(செல்வி) ந. கனகரத்தினம்,**
பணிப்பாளர்.

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
09 – 11 – 97
(சி/2011)

கொக்குவிலில்

# " சாருஜன் "

★ போட்டோ பிரதிகள்
★ அடையாள அட்டை கவரிடுதல்
★ பற்றறி மின்னேற்றுதல்

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் மன நிறைவுடன் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**" சாருஜன் "**
கே. கே. எஸ். வீதி,
(கொக்குவில் இந்துக்கல்லூரி முன்பாக கொக்குவில்)

உரிமையாளர்: செ. சந்திரகுமாரன்.
(49837)

# 4ஆம் ஆண்டு நினைவலைகள்



ஊற்றாக: 01 — 12 — 1933
கோற்றாக: 25 — 10 — 1993

## அமரர் செல்லையா அப்புத்துரை

(ஒய்வு பெற்ற உப அதிபர்)


திதி: ஏகாதசி 10-11-1997

நினைவில்:
மனைவி, மகன், மகள்.

'பிருந்தாவன்'
உடுவில் மேற்கு,
சுன்னாகம்.
(51017)

# நினைவஞ்சலிகள்

10 ஆம் ஆண்டு



திருமதி
**சர்வானந்தம் சர்வேஸ்வரரூபி**

தோற்றம்: 1947–09–21
மறைவு: 1987–11–10

பத்தாண்டுகள் பறந்தோடிப் போயின பாரினில்
நித்தமும் நின் நினைவலைகள் நெஞ்சை விட்டு நீங்கா
சந்ததமும் உன் நினைவே சர்வேஸ்வர ரூபி
அத்தனடிக் கீழ் அமர்வாய் அம்மா இனிதே.

உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
கணவன், மகள், மகன்மார், மருமகன்,
மாமி, தந்தை, சகோதரர்கள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்.

75 ஆம் நாள்



திருமதி
**கணபதிப்பிள்ளை மகேஸ்வரி**

மண்ணில்: 1924–12–17
விண்ணில்: 1997–08–26

எழுபத்தைந்து நாள்கள் எழில் காட்டிப் போயின
பழுதின்றி நீ பரிவுகாட்டி எமை வளர்த்தனை
தாயே! ஈஸ்வரி தரணியில் உமை நாம் நினைப்போம்
ஆயசிவன் தாள் அமர்ந்து இன்புறுவாய் அம்மா.

உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''சர்வகிரி''
ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்: கணவன், [illegible]
ச. சர்வானந்தம்
(50958)

# 3ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணகம்: 11 — 12 — 1927
விண்ணகம்: 13 — 11 — 1994

## திருமதி தவமலர் குமாரசாமி

(ஒய்வு பெற்ற ஆசிரியை)

எங்கள் குடும்ப ஒளிவிளக்கே!
உங்கள் நினைவுகள்
எங்களை விட்டு என்றென்றும் அகலாதம்மா.

உங்கள் பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கோணன் வேலில்,
வல்வெட்டி.
(50984)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் யாழ்ப்பாணம்

# உதயன்

## அசட்டைப் போக்கு வேண்டாம்!

சரித்திரப் பிரசித்திபெற்ற தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடந்த வாரம் இடம்பெற்ற முச்சாவு நிகழ்வு பரிதாபகரமானதும் துக்ககரமானதும் ஆகும். இளைஞர்கள் மூவர் அவமாக மரணம் அடைந்த இந்த விபத்து எல்லோரது கவனத்தையும் அக்கறையுடன் ஈர்க்க வேண்டிய ஒன்றாகும்.

எதனையும் இலகுவானதாகவும், விளைவு நோக்காமலும் பெரும் போக்காக நடந்து கொள்ளும் வழக்கம் இளைஞர்கள் மத்தியில் வளர்ந்து வருகிறது. ஓர் அலுவலைச் செய்யும்போது, அவ்வாறு செய்தால் முடிவு என்னவாகும்? குறிப்பிட்ட காரியம் தவிர்க்கப்பட வேண்டியதா இல்லையா? என்பன குறித்து எதுவுமே சிந்திக்காமல், முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளாது மனம்போன போக்கில் செயற்படுகிறார்கள்.

ஒருதுறையில் தேர்ச்சியோ பயிற்சியோ இல்லாதவர்கள் கூட, எல்லாம் தெரிந்தவர்கள் போல எதனையும் செய்ய முற்படுகிறார்கள் அதனால் ஆபத்துக்களும், விபத்துக்களும் சேதங்களும் உண்டாகின்றன.

உதாரணத்துக்கு மின்சார விநியோகம் மற்றும் அது சம்பந்தமான அறிவோ பயிற்சியோ இல்லாதவர்கள், வீடுகளிலும் பொது இடங்களிலும் மின்சாரம் பொருத்துதல், கம்பி இணைத்தல் ஆகிய செயல்களை அவதானமோ அச்சமோ இல்லாது செய்ய முனைகிறார்கள். அதனால் உண்டாகும் விபத்து உயிராபத்தில் முடியுமே என்று இறிதும் கவலை கொள்வதில்லை.

அது போன்றே வானொலி, தொலைக்காட்சி குறித்து பட்டறிவு எதுவும் இல்லாத இளைஞர்கள் அவற்றைத் திருத்த முடியும் எனக் கருதி, கையாண்டு சேதமாக்கி விடுகிறார்கள்.

இவ்வாறு இன்னும் பலப்பல.

இளம் வயதுப் பருவம் துடிப்பானது. எதனையும் செய்ய வேண்டும், சாதித்துவிடவேண்டும் என்ற வேகமும் சக்தியும் கொண்டது. புதியவற்றைச் செய்து ஒரு வகை இன்பம் காணும் தன்மையது. அதனால் அபார துணிச்சலும் விறும் இளைஞரிடையே வளர்வது இயல்பு; இயற்கை.

இளங்கன்று பயமறியாது என்ற போக்குடன் இளைஞர்கள் நடந்து கொள்வதால் அவர்களுக்கு மட்டுமன்றி சமூகத்துக்கும் பாதிப்புகள் உண்டாகின்றன.

செல்வச்சந்நிதி விபத்தில் இறந்தவர்கள் மூவரும் இளைஞர்கள்; வாழ வேண்டிய வயதினர். இவர்களது பெற்றோர்கள் இவர்களைப் பற்றி எத்தனை ஆசைகளை, கனவுகளை தமது மனங்களில் சுமந்து கொண்டிருந்திருப்பர்.

இந்த மூன்று இளைஞர்களும் விபத்துக்குப் பலியாகாமல் இருந்திருப்பின் சமூகத்துக்கு அவர்கள் எத்தனையோ வகையில் பங்களித்திருப்பார்கள்.

தமிழர் சமூகம் ஏற்கனவே பல வகைகளாலும் வழிகளாலும் மெலிந்து, நலிந்து போயுள்ளது. இத்தகைய அவச்சாவுகளும் விபத்துக்களும்சமூக வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் பல வகையான பின்னடைவுகளை உண்டாக்கும்.

ஆகையால் இளைஞர்களின் "எதுவும் நடக்கட்டும்" என்ற அசட்டையான போக்குக்கும் செயற்பாட்டுக்கும் இடமளிக்காது அவர்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பை ஒவ்வொரு பெற்றோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

# மலையக மக்கள் முன்னணி நேற்று தலவாக்கலையில் 'பிக்கெட்டிங்'

## 15 ஆயிரம் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்

நுவரெலியா, நவ. 10

நுவரெலியா, தலவாக்கலை நகரில் மலையக மக்கள் முன்னணி நேற்று ஏற்பாடு செய்த ''பிக்கெட்டிங்'' போராட்டத்தில் சுமார் 15 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவது, மலையக இளைஞர் தகுந்த காரணம் இன்றி கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்படுவது போன்றவற்றைக் கண்டித்து பிரதியமைச்சர் பெ. சந்திரசேகரன் தலைமையில் இப்பிக்கெட்டிங் நடைபெற்றது.

இப் போராட்டத்துக்கு ஆதரவாகத் தலவாக்கலை நகரில் சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

இது தொடர்பாகப் பிரதி அமைச்சர் பெ. சந்திரசேகரன் கருத்துத் தெரிவிக்கையில்; மலையக மக்கள் விவகாரத்தில் அளித்த வாக்குறுதிகளை அரசு 3 வருடகாலமாக நிறைவேற்றத் தவறிவிட்டது. எதிர்காலத்தில் நிறைவேற்றுமா? என்பது சந்தேகம்.

அரசுக்கு எமது கண்டனத்தைத் தெரிவிப்பதற்காகவே இப்போராட்டம் —என்றார். (இ-21)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.10

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் நிறுவுனர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற உள்ளது.

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைமுதுநிலைவிரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-9)

## திருத்தப்பட்ட மதகு ஊடான போக்குவரத்து ஆரம்பம்

வடமராட்சி, நவ. 10

வல்லை முச்சந்தி பருத்தித்துறை வீதியில் உள்ள மதகு வாகனப் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.

இம் மதகின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளபோதிலும் இன்னும் தார் மாத்திரமே ஊற்றப்படவேண்டியுள்ளது.

எனினும் கடந்த சில தினங்களாக கடும் மழை பெய்தமையால் புனரமைப்பு வேலைகளைக் கருத்திற்கொண்டு போடப்பட்ட தற்காலிகப் பாதை வழியாக வாகனங்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து இம் மதகு ஊடாக வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கப்பட்டது.

மழை காலம் முடிவுற்றதும் இம் மதகு மீதான வீதிக்கு தார் ஊற்றப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. [ஐ-173]

## தடுப்பூசி

பளைப் பிரதேசத்தில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி எதிர் வரும் 12 ஆம், 18 ஆம் திகதிகளில் ஏற்றப்படவுள்ளன.

12 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு முகமாலை சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11.30 மணிக்கு இத்தாவில் சரஸ்வதி சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 1.30 மணிக்கு பெரியபளை சனசமூக நிலையத்திலும்—

18 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை— முற்பகல் 10.00 மணிக்கு மாசார் கிராம அலுவலர் பணிமனையிலும் பிற்பகல் 11.30 மணிக்கு சோரன்பற்று கிராம அலுவலர் பணிமனையிலும், 1.00 மணிக்கு தர்மக்கேணி சனசமூக நிலையத்திலும் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படுமென பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார். (ஐ-117)

## வெளி ஆள்களும் மீன் விற்க சின்னக்கடையில் அனுமதி

நல்லூர், நவ. 10

குருநகர் மீன் சந்தையில் வெளி ஆள்களும் மீன் விற்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெளி ஆள்கள் குருநகர் சின்னக்கடை மீன் சந்தையில் மீன் விற்பது அப்பகுதி மீனவர்களால் தடைசெய்யப்பட்டிருந்தது.

இது ஒரு பொதுவான சந்தை என்பதால் வெளிஆள்கள் சந்தையில் மீன் விற்பதைத் தடை செய்ய முடியாதென யாழ். மாநகரசபை ஆணையாளரும் மற்றும் அதிகாரிகளும் தெரியப்படுத்தி இருந்தனர்.

இதனையடுத்து இன்று திங்கட்கிழமை முதல் மீன் விற்பதற்கு வெளி ஆள்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-5-103)

## காணாமற் போனோருக்கு மரணச் சான்றிதழ் வழங்க முடிவு

வடமராட்சி, நவ. 10

இராணுவ நடவடிக்கைகளின் போது காணாமற்போய் ஒருவருட காலத்திற்கு மேல் தகவலற்று இருக்கும் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு மரணச் சான்றிதழ்கள் வழங்க பிரதேச செயலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஒரு வருடத்திற்கு மேலாகக்காணாமற் போயுள்ளவர்களுக்கு மரணச்சான்றிதழ் வழங்குவதற்காக இவர்களின் விவரங்கள் பிரதேசச்செயலக விளம்பரப் பலகையிலும், அந்தந்தப் பிரிவு கிராம அலுவலரின் அலுவலகங்களிலும் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன

காணாமற் போயுள்ளவர்களுக்கு மரணச்சான்றிதழ்கள் வழங்குவதை ஆட்சேபிப்பவர்கள் பிரதேச செயலகத்திற்கு எழுத்து மூலமாக அறிவிக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். [ஐ-11]

## வடமராட்சியில் உரம் விநியோகம்

வடமராட்சி, நவ. 10

வடமராட்சிப் பிரதேச நெற்செய்கையாளர்களுக்கு அடுத்த வாரம் முதல் யூரியா உரம் வழங்கப்படவுள்ளது.

ஏக்கருக்கு ஓர் அந்தர் வீதம் புலோலி கமநல சேவை நிலையத்தில் வழங்கப்படும். (ஐ-173)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ். கல்வி வலயம் II இன் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 19 வயதுப் பிரிவினருக்கான அரையிறுதி யாட்டங்கள் இன்று பிற்பகல் 1-00 மணி முதல் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

சென். ஹென்றீஸ் கல்லூரி அணியை எதிர்த்து உரும்பிராய் இந்துக் கல்லூரி அணியும்—

யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோத இருக்கின்றன. (உ)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், நவ.10

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சேவைக்கழகத்தின் ஆண்டு விழா இன்று திங்கட்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

இவ் விழாவில் இளைப்பாறிய ஆசிரியரும் கழகத்தின் முன்னாள் பொறுப்பாசிரியருமான பொ. வில்வராஜா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

இசை நிகழ்ச்சிகளும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் அங்கு இடம்பெறும். (ஐ-9)

## சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ் தொழில்நுட்பக் கல்லூரி 1997 ஆங்கில தேசிய சான்றிதழ் (என். சீ. ஈ.) பாடநெறி பகல் நேர மாணவர்களின் ''நொவிஸ்'' சஞ்சிகையின் நான்காவது இதழ் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர். நந்தகுமரன் நூலை வெளியிட்டு வைப்பார்.

உயர் தொழில்நுட்ப நிறுவக பகுதிநேர ஆங்கில விரிவுரையாளர் எம். ஜி. நடராஜா ஆய்வுரை நிகழ்த்துவார். (ஐ)

## அளவு வகுக்க...

(5 ஆம் பக்கத் தொடர்)

இது பழைய கள்ளையே பழைய பிளாவிலேயே ஊற்றிப் பொது மக்களைப் பருகித்திருப்தியடையச் சொல்லும் பகிடிதான்!

நட்புறவு கொள்வதென்பது வதையால் ஏற்படுத்தப்படுவதல்ல, அன்பால், பண்பால் ஏற்படுவது. புதிய மாணவர் கூச்சம், பயம் கொண்டிருப்பதைக் குறைப்பதற்கு வதை எவ்விதமும் உதவாதது.

இவ்விரண்டின் அடிப்படையைத் தெரிந்து கொள்ள முடியாத மாணவன் என்றால் இவரைப்பற்றி சாதாரண மனிதர் தகுதியற்றவர் என்று தரம் குறைத்தே கொள்வர்.

மூன்றாவதாக தனது சாகாக்களின் வதை நடவடிக்கைகளை நியாயப்படுத்த அளவோடு செய்ய வேண்டுமென்கிறார்.

உயர் கல்விபயிலும் ஒரு மாணவன் பின்வருவனவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

★ மற்றவர்களின் உடலை உரிமைகளைப் பாதிக்கும் வகையில் நடப்பது சட்டப்படி நியாயப்படி குற்றம் என்பது சிறிது பெரிது என்பது பொருந்தாது.

★ ஒருவர் தான் பாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தும் உரிமையுடையவர் ஆனால் தனக்கு ஏற்படும் பாதிப்பை தடுக்க முடியாத சூழ் நிலையில் தான் புதிய மாணவன் இருக்கின்றான்.

மேலும் பகிடிவதை செய்யலாம் என்று கூறும் மாணவனால், தனது குடும்பத்தில், உறவினரில், ஊரில் உள்ள புதிய மாணவருக்கு வெளிப்படையாக அதனைச் செய்ய முடியுமா? இல்லையேல் பகிடிவதை மறைந்து இருந்து தாக்கும் கோழைத்தனம் மிகுந்த செயல் அல்லவா?

சட்டத்தைக் காட்டி கைதாகி வதை பட்டுக் காணாமற் போன ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளின் கதை குறிப்பிட்ட மாணவனுக்குத் தெரியாதா?

சித்திரவதையை சிறிய அளவு பெரிய அளவு என்று எப்படிப் பிரித்துப் பார்க்க முடியும்? வகுக்கமுடியும்?

பகிடிவதை என்பது மனித உரிமை மீறல். ஆனால் அதே வதை செய்யும் மாணவர்கள் தங்கள் உரிமைகள் பல்கலைக்கழகத்தில் வழங்கப்படவில்லை என்று பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

பகிடிவதை என்ற போர்வையில் சிரேஷ்ட மாணவர் சிலர் தமது இச்சைகளை வக்கிரத்தனத்துடன் பூர்த்தி செய்வதில் ஈடுபடுவதாக சொன்னால் போதுமா? அடுத்து சில சிரேஷ்ட மாணவரை ஏன் பல சிரேஷ்ட மாணவர் தடுப்பதில்லை.

பகிடிவதை [illegible] யற்றது என்று பெற்றோர், பெரியோர், [illegible] மக்கள் வெறுக்கிறார்கள். அதனை முற்றாக ஒழிக்க வேண்டும் என்பதே 99 சத வீதமான மக்களின் விருப்பமும் வேண்டுதலும் ஆகும்.

## தேங்காய் விலை உயர்வு

உரும்பராய், நவ 10

தேங்காயின் விலை அதிகரித்துள்ளது. பெரிய தேங்காய்கள் 14 ரூபா விலையில் விற்பனையாகின்றன.

முன்பு இதன் விலை எட்டு ரூபா வரையிலேயே இருந்தது.

கடந்த சில மாதங்களாக நிலவிய கடும் வரட்சியினால் தென்னை மரங்கள் காய்க்காது விட்டமையே இவ்விலையேற்றத்திற்குக் காரணமாகும்.

வரட்சியைத் தாங்க முடியாது பல இடங்களில் தென்னைகள் பட்டுப்போயின.

## நாளை

**ஐப்பசி 25**

செவ்வாய்க்கிழமை

திதி: துவாதசி
பின் இரவு 2.27 வரை.
நட்சத்திரம்: உத்தரட்டாதி
முன் இரவு 9 45 வரை
சுபநேரம்: 10.36-12 06
ராகுகாலம்: 3.06-4.36
(பகலுக்கும் இரவுக்கும் மழைய நேரப்படி)

## இலவசமாக மூக்குக்கண்ணாடி

வடமராட்சி, நவ.10

வடமராட்சி லயன்ஸ் கழகம் கண்ணாடி வழங்குவதற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் 15 பேருக்கு இலவசமாக கண்ணாடிகளை வழங்கியது.

மந்திகையில் உள்ள அதன் அலுவலகத்தில் வைத்து யாழ் வலயத்தலைவர் லயன். ஏ. தங்கேஸ்வரன் வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் சார்பில் இவற்றை வழங்கினார். (ஐ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்: புலிகள் தொடர்ந்து வற்புறுத்து

மட்டக்களப்பு, நவ.10

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் 3ஆம் தரப்பு மத்தியஸ்தத்தை வரவேற்கின்றது. ஆனால் அரசு தமிழர்களின்பிரச்சினை சர்வதேசப் பிரச்சினைகளில் ஒன்றாக இடம்பெறுவதைத் தடுப்பதற்காக 3 ஆம் தரப்பு மத்தியஸ்தத்தை நிராகரிக்கின்றது.

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு வெளியிட்டுள்ள ''ஆயுதப் போரும் அரசியல் நோக்கும்'' என்ற கைநூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நூலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது—

தமிழரின் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகளை ஒரு தேசிய விடுதலை இயக்கமாக ஏற்க அரசு மறுக்கின்றது. இதற்குக் காரணம் தமிழரின் போராட்டத்தை அங்கீகரிப்பதாக அமையும் என அரசு கருதுகின்றது.

திம்பு முதல் யாழ்ப்பாணம் வரை விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய அரசு அப்பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளை எவ்வித சந்தேகமும் இன்றி தமிழர்களின் அரசியல் பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டது.

ஆனால் பேச்சுவார்த்தைகளின் போது வழங்கிய தமிழர்களின் 'அரசியல் பிரதிநிதிகள்' என்ற அந்தஸ்து பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த போது அரசு நீக்கி விட்டது.

சமாதான காலத்தில் புலிகளை மக்கள் இயக்கமாக அங்கீகரித்துவிட்டு யுத்த காலத்தில் பயங்கரவாதிகள் என இழிவுபடுத்துவது கேலிக்கூத்தான அரசியல் நாடகம் ஆகும்.

அரசு சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் நோக்குடன் விசாரணைக் குழுக்களையும், மனித உரிமை ஆணைக்குழுவையும் நியமித்துள்ளது.

தமிழரின் தேசிய பிரச்சினை மோசமடைந்து வருவதையிட்டு கவலைப்படும் நாடுகள் இருதரப்பும் பேச்சுவார்த்தை ஒன்றின் மூலம் அரசியல் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்துகின்றன.

இரு தரப்பினரின் மத்தியில் இருந்து வரும் பரஸ்பர அவநம்பிக்கை, பகைமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மத்தியஸ்தம் அல்லது பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய தயார் என நோர்வே, சுவீடன், கனடா, சுவிஸ், ஆஸ்திரேலியா, பிரிட்டன் போன்ற நாடுகள் அறிவித்துள்ளன.

ஆனால் அரசு உள்நாட்டு விவகாரம் எனக்கூறி 3 ஆம் தரப்பை ஏற்க மறுக்கின்றது.

இதற்கு சில அடிப்படைக் காரணங்கள் உள்ளன.

★ தமிழரின் தேசிய பிரச்சினை சர்வதேச பிரச்சினைகளில் ஒன்றாகக் கருதப்படுவதை அரசு விரும்பவில்லை.

★ தமிழர் போராட்டத்தில் பிரதான கதாநாயகன் என்ற அந்தஸ்து விடுதலைப் புலிகளுக்குக் கிடைப்பதை அரசு விரும்பவில்லை.

★ தமிழரின் பாரம்பரிய தாயகத்தை இராணுவ ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்தால் தாயக தன்னாட்சிக் கோரிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். இதன் மூலம் புலிகளின் போராட்டத்துக்கு முடிவு கட்டிவிடலாம் என்பது அரசின் திட்டமாகும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-21)

# வியட்நாம் சிறுமிக்கு யுனெஸ்கோ கௌரவம்

லண்டன், நவ. 10

27 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கா வியட்நாம் மீது நேபாம் குண்டுத்தாக்குதலை நடத்தியபோது உலகின் மனச்சாட்சி கொதித்தது.

அப்போது அந்தக் கொடிய தாக்குதலிலிருந்து தப்பி ஓர் ஒன்பது வயதுச் சிறுமி நிர்வாணமாகத் தெருவிலே ஓடும் படத்தைக் கண்டு நீதி கோரிய மனங்களெல்லாம் விம்மி வெடித்தன.

உலக நாடுகளின் மனச்சாட்சியை அசைத்து நியாயம் கேட்ட அந்த சர்வதேச புகழ்பெற்ற படத்திற்கு பத்திரிகைத் துறைக்கான அதியுயர் விருதான 'புலிட்சர்' பரிசு அஸோஸியேட்டட் பிரெஸ் படப்பிடிப்பாளரான நிக் அட்டுக்குக் கிடைத்தது. அதைச் செய்ததும் அமெரிக்காதான்.

சிம் பூக் என்ற அந்தச் சின்னஞ்சிறு சிறுமி தனது எரிகாயங்களைமாற்றுவதற்காக சைகோன் ஆஸ்பத்திரியில் 14 மாதங்கள் சிகிச்சை பெற்றார். அங்கு அவருக்கு 17 மாற்று அவயச் சிகிச்சைகளும் சத்திர சிகிச்சைகளும் வெற்றிகரமாக மேற்கொளளப்பட்டன.

சிம்மிற்கு இப்போது 34 வயது. அவருக்கு நல்லெண்ணத் தூதுவர் என்ற கௌரவத்தை இன்று யுனெஸ்கோ வழங்கவுள்ளது.

சமாதான கலாசாரத்தைப் பரப்புகின்ற ஒரு நல்லெண்ணத் தூதுவர் என்ற விதத்தில் சிம் சமாதானத்திற்கான தேவை, பரஸ்பர புரிந்துணர்வு, மோதல்கள், வன்முறை என்பவற்றிற்குப் பதிலாகக் கலந்துரையாடலும் பேச்சுவார்த்தைகளுமே அத்தியாவசியம் என்ற செய்தியை உலகெங்கும் பரப்புபவராக இருப்பார் என்று யுனெஸ்கோ செய்திக் குறிப்பொன்று கூறுகிறது. (ஐ)

# சவால்களுக்கு முகம் கொடுத்து கல்வியில் முன்னேறுகிறோம்

## மாணவர் ஒன்றுகூடல் வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், நவ. 10

எமது மாணவர்கள் பல சவால்களுக்கு முகம் கொடுத்து கல்வியில் முன்னேறி வருகிறார்கள். அன்று தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவரின் உயர் கல்விக்கு ஆப்பு வைக்கப்பட்டது. இன்று ஆரம்பக் கல்விக்கே ஆப்பு வைக்கப்படுகிறது.

'புளொட்'' அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜா இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 5 ஆம் திகதி சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் முறைசாராக் கல்வி மாணவர்களின் ஒன்றுகூடல் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

போதனாசிரியை செல்வி நகுலேஸ்வரி செல்லத்துரை தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் பாடசாலை அதிபர் செ. குபேரநாதன் மங்கள விளக்கேற்றினார். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ஐ)

# பயிற்றப்படாத ஆசிரியருக்கு 2 வருட காலப் பயிற்சி

அரச பாடசாலைகளில் கற்பிக்கும் பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு 2 வருடகால பயிற்சி வழங்குவதற்கு கல்வி உயர்கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதன்படி அடுத்த ஜனவரி முதல் இலங்கையிலுள்ள 10 ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பொழுது இவ்வாறு பயிற்றப்படாத ஆசிரியர்கள் 4 ஆயிரத்து 500 பேர் உள்ளனராகவும், இவர்களில் தமிழர்கள் ஆயிரத்து 500 பேர் எனவும் கணக்கிடப்பட்டுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது. (இ-164)

# கட்டாக்காலி கால்நடைகளை பிடிக்க அனுமதிப் பத்திரம்

நவாலி விவசாயிகள் சம்மேளனத்தின் கால்நடை பிடிபோரர்களுக்கு அதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

அனுமதி கோரி விண்ணப்பித்த எட்டுப் பேரில் மூவருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனையோருக்கும் விரைவில் அனுமதி வழங்கப்படும் எனபெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இதேவேளை கட்டாக்காலி கால் நடைகள் தொடர்பாக பொதுமக்களை எச்சரிக்கும் துண்டுப் பிரசுரங்கள் விவசாயிகளால் வெளியிடப்பட்டன.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி லோகாம்பிகை சிதம்பரநாயகம்

கைதடி தெற்கைச் சேர்ந்த காசிப்பிள்ளை ஆறுமுகம், தையல்நாயகி ஆகியோரின் சிரேஷ்டபுத்திரி திருமதி லோகாம்பிகை சிதம்பரநாயகம் 07-11-1997 வியாழக்கிழமை சுவிஸில் காலமாகிவிட்டார்.

இவர் சீனித்தம்பி சிதம்பரநாயகத்தின் அன்பு மனைவியும், மகேந்திரன் (சுவிஸ்), திருமதி லலிதாம்பிகை இராசலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும், புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த நல்லதம்பி சீனித்தம்பி, முத்துப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மருமகளும், திருமதி சோதிநாயகி (சுவிஸ்), கந்தசாமி, சிவசுப்பிரமணியம் தர்மராணி (கொழும்பு), தர்மமலர், சத்தியதேவி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் 09-11-1997 ஞாயிறு சுவிஸில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கா. ஆறுமுகம் (V.C)
(தந்தை)

கைதடி தெற்கு,
கைதடி.

(51061)

## திருமதி தவமணி தங்கவேலு

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வவுனியாவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி தங்கவேலு 5-11-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கவேலு அவர்களின் அன்பு மனைவியும், இரவிச்சந்திரன், காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் தவனேஸ்வரி, தவச்செல்வி ஆகியோரின் அன்புத்தாயாரும், சுசிலாவின் அன்பு மாமியும், யசிதாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெற்று 5-11-97 பிற்பகல் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தகவல்:
த. தவனேஸ்வரி
(மகள்)

துர்க்காபுரம் மகளிர்இல்லம்,
தெல்லிப்பழை.

(51065)

# வீடுபார்க்கச் சென்றவர் திரும்பவில்லை

வவுனியா, நவ. 10

கடந்த வியாழக்கிழமை ஓமந்தைப் பகுதியிலுள்ள கொந்தக்காரன்குளம் பகுதிக்கு வீடு பார்க்கச் சென்ற இளைஞர் ஒருவரைக் காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

குஞ்சுக்குளம் பகுதியில் இடம்பெயர்ந்து வசித்துவந்த பொன்னம்பலம் யோகதாஸ் என்ற (23 வயது) இளைஞரே காணாமல் போனவராவார். (இ-164)

# வீதிக்கு குறுக்காக வெள்ள வாய்க்கால்கள்

மல்லாகம், நவ 10

வலி. வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் காங்கேசன்துறை வீதிக்கு அண்மையில் வெட்டப்பட்ட வெள்ள வாய்க்காலினால் பொதுமக்கள் பெரும் சிரமம் அடைகின்றார்கள்.

பிரதான வீதிக்குச் சமாந்தரமாக வெள்ள வாய்க்கால் வெட்டப்பட்டதினால் பிரதான வீதியில் இருந்து பிரியும் உபவீதிகளுக்கு வாகனங்கள் செல்ல முடியாமல் இருப்பதுடன் இரவில் வரும் பாதசாரிகளும் கிடங்கில் வீழ்ந்து எழும்பும் நிலையும் ஏற்பட்டுள்ளது. (ஐ-68)

## தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் திரட்டப்பட்டு ஏப்ரல் முதல் வாரம் நாடாளுமன்றத்தில் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கா தெரிவித்தார்.

அதே நேரம் அதிகாரப் பரவலாக்கல் யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் போராட்டத்தை ஏனைய கட்சிகளுடன் இணைந்து மேற்கொள்ள திட்டமிடப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (இ-21)

நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
A/L 97
(மீட்டல் வகுப்பு)
வணிகபுள்ளிவிவரவியல்
ஆசிரியர்
[illegible]
ஆரம்பமாகிவிட்டது.
(49838)

## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆர். எல். தலைவர் பத்மநாபா கொலைசெய்யப்பட்டதும், கொலையாளிகள் தப்பிச்சென்றதும் இதற்கு உதாரணங்கள்.

ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர்கள் கொல்லப்படுவது என்பது மிகவும் தேவையான ஒன்றுதான். ஆனால் அதற்கு முன்னர் தனக்குத் தெரியப்படுத்துமாறு நடேசன் என்ற விடுதலைப் புலிகளிடம் கருணாநிதி கூறியுள்ளார்.

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் இருக்கின்ற இடங்களைக் கூறினால் அவர்களுக்குத் தொல்லை தராமல் இருக்கும்படி பொலீஸாருக்கு கட்டளையிடமுடியும் என்றும் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அப்போது உட்துறைச் செயலாளராக இருந்த நாகராஜன் தனது சாட்சியத்தில் தான் (கருணாநிதி) டில்லியிலிருந்து வரும்வரை பத்மநாபாவைக் கொலை செய்தவர்களைப் பிடிப்பதில்அதிக ஆர்வம் காட்ட வேண்டாம் என்று கருணாநிதி பொலீஸுக்குதெரிவித்ததாகக் கூறியுள்ளார்.

கருணாநிதி விடுதலைப் புலிகளுடன் நட்பாக இருந்தார் என்றும், இவருடைய ஆட்சியின் போது விடுதலைப் புலிகள் நடமாடுவது இலகுவாக இருந்ததாகவும் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த காசி ஆனந்தன் தெரிவித்திருந்தார்.

இப்படி இந்தியா டுடே இதழில் வெளியிடப்பட்டிருக்கும் ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்திக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புப் படையை விலக்கிக் கொண்டதற்காக முன்னாள்பிரதமர் வி. பி. சிங்கிற்கும்—

ராஜீவ்காந்தி பாதுகாப்பு விடயத்தில் மெத்தனப்போக்கைக் கடைப்பிடிப்பதற்காக முன்னாள் பிரதமர் சந்திரசேகருக்கும்—ஜெயின் கமிஷன் கண்டனம் தெரிவித்திருப்பதாகவும் இந்தியா டுடே குறிப்பிட்டுள்ளது. (இ-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10-11-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org